[7th April 1958

பிரத்தியேக அதிகாரி தங்களுடைய சிபார்சுகளை அனுப்பியிருக்கிறார். அவை களெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு அப்போதைக்கப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Sri P. S. CHINNADURAI : இலங்கையிலிருந்து நம்முடைய தமிழ் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறவர்களுடைய தொகை " நாம்—தமிழர் இயக்கம் " ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால் எத்தனை, பின்னால் எத்தனை என்று அமைச்சர் அவர்கள் தகவல் தெரிவிக்க முடியுமா ?

The Hon. Sri. M. BHAKTAVATSALAM : இந்த இயக்கத்தைப் பற்றி அரசாங்கத்தினிடம் தகவல் ஒன்றும் இல்லை. ஆகையால், இதைப் பற்றி பதிலளிப்பதற்கில்லை.

Sri K. B. S. MANI : மந்திரி அவர்கள், அவ்வப்பொழுது நட வடிக்கை எடுத்து, அவர்களுக்குப் புனருத்தாரண வாழ்வு அளிக்க வசதி செய்து இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எவ்வளவுபேருக்கு என்ன என்ன செய்திருக்கிறார் என்பதை விளக்குவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்குப் பதிலளிப் பதற்கு என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை.

Seed Farms

* 582 *Q.*—Sri A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Japanese method of cultivation is adopted in the State Seed Farms at present; and

(*b*) if not, the reasons therefor and what other method of cultivation is adopted there?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the affirmative.

(*b*) Does not arise.

Sri A. VEDARATHNAM : விதைப் பண்ணைகள் நடைபெறுகிற அந்த நிலங்களெல்லாம் இப்பொழுது குத்தகைக்கு எடுக்கப்பட்டிருக்கின்றனவா ? அவைகளை அரசாங்கமே சொந்தமாக வாங்கிக்கொள்ள ஏதாவது உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது குத்தகைக்கு தான் எடுக்கப்பட்டிருக்கிறது. ஓரளவு வாங்குவது என்ற உத்தேசம் இருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது.

Sri T. S. RAMASWAMY PILLAI : எல்லாவிதைப் பண்ணைகளிலும் ஜப்பானிய முறை கையாளப்படுகிறதா ? இல்லை என்றால் எல்லா விதைப் பண்ணைகளிலும் அம்முறை கையாளப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நெற் பயிரைப் பொறுத்த மட்டில் ஜப்பானிய முறை கையாளப்பட்டு வருகிறது.

Murder cases

* 585 *Q.*—Sri T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the number of cases of murder, (i) registered and (ii) ending in conviction during the last five years, districtwar?